IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.227/2026

Deposition of Witness PW1

Name : ஆறுமுகம் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் சக்தி மீன் மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 24.01.2026 அன்று மாலை 7 மணி அளவில் மதுரை வீரன் கோவில் வாசப்படி அருகில் எனது மைத்துனர் லோக ஜெயவர்மனும், ஆஜர் எதிரியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். ஆஜர் எதிரி லோக ஜெயவர்மனை பட்டாகத்தியால் அடிக்க வந்தார். நான் ஆஜர் எதிரி இடம் ஏன் அடிக்கப் போகிறாய் என்று கேட்டதற்கு என்னை கெட்ட வார்த்தையால் பேசி கழுத்தில் வெட்டிவிட்டார். நான் அந்த இடத்திலேயே மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். அருகில் இருந்தவர்கள் என்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

மருத்துவமனையில் ஒன்றரை மணி நேரம் சிகிச்சை எடுத்துக் கொண்டு பிறகு இது சம்பந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** . தற்போது

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.03 19:28:47 +0530

என்னிடம் காட்டப்படும் கத்தியால்தான் ஆஜர் எதிரி என்னை வெட்டினார். **கத்தி சான்று பொருள்.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் ஒரே ஏரியாவில் தான் வேலை செய்து வருகிறோம் என்றால் சரிதான். ஒரே மீன் கடையில் வேலை செய்தோமா என்றால் இல்லை. பக்கத்து கடையில் வேலை செய்தோம். மீன் கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கும், ஆஜர் எதிரிக்கும் சிறுசிறு சண்டைகள் வந்துள்ளது என்றால் இல்லை. போலீசாரின் விசாரணையில் ஆஜர் எதிரி என்னை கழுத்தில் வெட்டியதாகவும், நான் அதில் மயக்கம் போட்டு விழுந்து விட்டதாகவும் சொல்லியுள்ளேன்.

நானும் எதிரியும் அருகருகே உள்ள வீடுகளில் வசித்து வருகிறோமா என்றால் இல்லை. ஒரே ஊரில் வசித்து வருகிறோம். எனது மைத்துனர் எதிரியுடன் வேலை பார்த்தாரா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் அருகில் இருந்தவர்கள் என்னை இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றனர். எனக்கு இருசக்கர வாகனத்தில் செல்லும் போது மயக்கம் இல்லை என்றால் சரியல்ல. மயக்கத்துடன் தான் சென்றேன்.

எதிரி வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே எனக்கு பழக்கம் என்றால் இல்லை. அன்றைய தினம் நான் மதுரை வீரன் கோவிலுக்கு செல்லும் போது என்னை தவிர வேறு யார் இருந்தார்கள் என்றால், யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நானும் எதிரியும் அருகருகே உள்ள மீன் கடையில் வேலை செய்யும் போது எங்கள் இருவருக்கும்

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:29:00 +0530

இடையே தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த முன் விரோதத்தை வைத்துக் கொண்டுதான் நான் எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனது மனைவி எழுதினார். அதில் எனது மனைவி சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் இல்லை. அவர் எழுதிக் கொடுத்தார். வேறு ஒருவர்தான் சாட்சி கையொப்பம் செய்தார். புகாரை இவ்வாறு எழுத வேண்டுமென யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் யாரும் சொல்லவில்லை. நான் முதல்விசாரணையில் சொல்லியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:29:06 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.227/2026

Deposition of Witness PW2

Name : தனலட்சுமி Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் பெரியார் நகரில் வசித்து வந்து வீட்டு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். புகார் தாரர் ஆறுமுகம் எனது அக்காவின் மருமகனார். 24.01.2026 அன்று இரவு 7:00 மணிக்கு மதுரை வீரன் கோயில் அருகே ஆறுமுகமும், லோக ஜெயவர்மனும் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி ஈ பிளாக்கில் உள்ள அவரது வீட்டு அருகே இருந்து வந்து உட்கார்ந்திருந்த லோக ஜெயவருமனை அடிக்க வந்தார். அப்போது ஆறுமுகம் அவரது மைத்துனரை ஏன் அடிக்க வருகிறாய் என்று எதிரியிடம் கேட்டார்.

அதற்கு எதிரி நீ யார் கேட்பதற்கு என்று, அவனுக்கும் எனக்கும் சண்டை அதனால் அடிக்க வருகிறேன் என்று கூறி சண்டை போட்டுக் கொண்டார்கள். சின்ன பையனை அடிக்க கூடாது என்று ஆறுமுகம் சொன்னபோது நீ யாருடா கேட்பதற்கு என்று கெட்ட வார்த்தையால் பேசி , பின்னால் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆறுமுகத்தின் இடதுபுற காது அருகே வெட்டியும் இடதுபுற தோளிலும் சிராய்ப்பு காயமும்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.03 19:29:15 +0530

ஏற்பட்டது. வெட்டிவிட்டு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று திட்டி விட்டு கத்தியை கீழே போட்டு விட்டு எதிரி ஓடிவிட்டார். பிறகு நானும் அருகில் இருந்தவர்களும் சேர்ந்து ஆறுமுகத்தை அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றோம். அங்கு மருத்துவமனையில் ஆறுமுகம் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தார் . அதன் பிறகு காவல் உதவி ஆய்வாளர் ஒருவர் பெரியார் நகர் வந்து என்ன நடந்தது என்று விசாரித்தார். நான் நடந்த பிரச்சனை சம்பந்தமாகவும் சம்பவம் நடந்த இடத்தை நான் போலீசாருக்கு அடையாளம் காட்டினேன். பின்னிட்டு இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சோலாரில் உள்ள சமீரா பானு என்பவர் வீட்டில் வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தை தினத்தன்று நான் வேலைக்கு செல்லவில்லை. அன்றைய தினம் நான் வேலைக்கு சென்றேனா இல்லையா என்று சமீரா பானு அவர்களை விசாரித்தால் தெரியும். மதுரை வீரன் கோவிலை சுற்றி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. போலீசாரின் விசாரணையில் தோள்பட்டையில் காயம் ஏற்படுத்தியதாக நான் சொல்லியுள்ளேன்.

எதிரி எனது ஊரைச் சேர்ந்த உள்ளூர்காரர் என்றால் சரிதான். எதிரிக்கும் எனது குடும்பத்தாருக்கும் முன் விரோதம் உள்ளதா என்றால் இல்லை. எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை தெரிந்தவர்.நான் வழக்கு சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும், ஆறுமுகம் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:29:23 +0530

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் எதிரி தகாத வார்த்தையால் பேசவில்லை என்றும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.03 19:29:29 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.227/2026

Deposition of Witness PW3

Name : ராமர் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் பெரியார் நகரில் வசித்து வந்து பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் ஆறுமுகம், தனலட்சுமி ஆகியோரை எனக்கு தெரியும். ஆனால் பேசியதில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 24.01.2026 அன்று நான் வேலைக்கு சென்று விட்டு வந்தேன். அப்போது மதுரை வீரன் கோவில் அருகே அழகு என்று அழைக்கப்படும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்து ஆறுமுகம் என்பவர் தலையில் வெட்டுப்பட்டு கத்திக் கொண்டிருந்தார். பிறகு நான் அவரை ஸ்கூட்டி வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு மருத்துவமனையில் விட்டு விட்டு நான் வந்து விட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய கோரியதன் அடிப்படையில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

24.01.2026 அன்று நான் வேலைக்கு சென்று விட்டு வந்தபோது எதிரி

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.03 19:29:36 +0530

ஆறுமுகத்தின் மைத்துனரை அடிக்க வந்ததாகவும் அது குறித்து ஆறுமுகம் எதிரியிடம் கேட்டபோது எதிரி ஆறுமுகத்தை தகாத வார்த்தையால் திட்டி தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் ஆறுமுகத்தின் இடது பக்க காது அருகே வெட்ட வரும்போது அதில் அவருக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும் மேற்படி சம்பவத்தின் போது நான் உடன் இருந்ததாகவும் போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக காயம்பட்ட ஆறுமுகத்தை மருத்துவமனையில் சிகிச்சைக்கு மட்டும் சேர்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் காயம் பட்ட நபரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:29:43 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.227/2026

Deposition of Witness PW4

Name : செங்கோட்டையன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் பெரியார் நகரில் வசித்து வந்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். 24.01.2026 அன்று ஆறுமுகத்தின் மைத்தனர் லோக ஜெயவர்மனை எதிரி அடிக்க வந்ததாகவும், அது குறித்து ஆறுமுகம் எதிரியிடம் கேட்டதற்கு எதிரி ஆறுமுகத்தை கத்தியால் வெட்டி விட்டதாகவும் அருகில் இருந்தவர்கள் சொல்லி நான் தெரிந்து கொண்டேன். பின்னிட்டு அடுத்த நாள் மதியம் சாப்பிடுவதற்காக நான் வீட்டிற்கு வந்த போது உதவி ஆய்வாளர் அங்கு வந்தார். நானும், கௌசல்யா என்ற நபரும் அங்கிருந்த போது வழக்கு சம்பவம் எங்கு நடந்தது என போலீசார் கேட்டு சம்பவ இடம் குறித்து பார்வை மகஜரும் மாதிரி வரைபடம் தயாரித்து எழுதிக் கொண்டனர்.

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் கவுசல்யா என்ற நபரும் கையொப்பம் செய்தார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.03 19:29:52 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு வழக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசாரின் விசாரணையில் நான் ஆட்டோ ஓட்டி வருவதாக தான் சொல்லி உள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் ஆட்டோ ஓட்டி வருவதால் எனக்கு டவுன் போலீசார் பழக்கம் என்றால் இல்லை. ஆறுமுகம் எனக்கு உறவினர். எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி உள்ளது என்று படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் சம்பவ இடமே செல்லவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக, ஆறுமுகம் எனது உறவினர் என்பதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:29:58 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.227/2026

Deposition of Witness PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : கௌசல்யா | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் திருச்செங்கோட்டில் வசித்து வந்து துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். 25.01.2026 அன்று மதியம் 1.30 மணிக்கு நானும், செங்கோட்டையன் என்பவரும் மதுரைவீரன் கோயில் அருகே பேசிக் கொண்டிருந்தபோது, போலீசார் அங்கு வந்துவழக்கு சம்பவம் அங்கு தான் நடந்ததா என்று விசாரித்து சம்பவ இடத்தை மார்க் செய்ய வேண்டும் என்று கூறி சம்பவ இடம் குறித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றனர். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஏற்கனவே போலீசார் எழுதி வைத்திருந்த தாளில் சம்பவ இடத்தை பார்த்துவிட்டு என்னிடம் கையொப்பம் பெற்றுனர் என்றால் சரிதான்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:30:06 +0530

போலீசாரின் விசாரணையில் திருச்செங்கோட்டில் வசிப்பதாக சொன்னேனா என்றால், போலீசார் விசாரிக்கும்போது நான் ஈரோட்டில் தான் வசித்து வந்தேன். போலீசாரின் விசாரணையில் நான் துப்புரவு பணியாளராக வேலை செய்வதாக சொல்லவில்லை. ஆறுமுகம் எனது உறவினரா என்றால் இல்லை தெரிந்தவர். நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் சம்பவ இடமே செல்லவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக, ஆறுமுகம் எனது உறவினர் என்பதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:30:12 +0530